# தர்ம வாஹினி

☼

பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபா

☼

தமிழாக்கம்

Published by

Sri Sathya Sai Books and Publications Trust, Tamilnadu

Old No. 16/ New No.41, Ramakrishnan Street,

Perambur, Chennai-600011.

## அத்தியாயம் 7

கண்களுக்குப் புலப்படும் சகல உயிர்களும் காயத்ரியைப் போல் ஒளிவிடுகின்றன. வாக்கு காயத்ரியே. சகல உயிரினங்களும் வாக்கால் குறிப்பிடுகின்றோம். வாக்கே (மொழி, ஒலி) இவைகளை அறிவிக்கிறன; காப்பாற்றுகின்றன. காயத்திரியும், எல்லா உயிரினங்களும் இந்த உலகில் வாழ்கின்றன. பிருதிவியை (உலகை) மீறிக்கொண்டு போக யாராலும் இயலாது. பிருதிவியே (உலகமே) புருஷனின் (ஆத்மா) உடல். எப்படி என்றால் உடலில் உள்ள உயிர், உடலைக் கடந்து போவதில்லை. உடலின் உள்ளே இதயம் இருக்கிறது. இதயத்தில் தான் உயிர் வாழ்கிறது. இதயத்தைக் கடந்து அது வெளியே போவதில்லை.

காயத்திரிக்கு நான்கு பாதங்கள் உண்டு. இதில் ஆறு வகைகள் உண்டு. அவை யாவை என்றால், பேச்சு, பொருள், உலகம், உடல், இதயம், உயிர் (வாக்கு, பூதம், பிருதிவி, சரீரம், ஹ்ருதயம், பிராணன்) எனப்படுபவையே அவை. இந்த பவித்திரமான காயத்ரியில் புகழப்படும் புருசன் சிறப்பு மிக்கவர் பவித்திரமானவர், அற்புதங்கள் நிறைந்தவர்; சகல உயிரினங்களும் அவருடைய உடலின் சிறு பாகமே. அந்த உயிரினங்களின் எண்ணிக்கை, இயல்பு, அளவு, கருத்து ஆகியவைகளைத் தெளிவாக அறிந்து கொள்வது இயலாத காரியம். இவைகள் அனைத்தும் அவரில் நான்கில் ஒரு பாகம் மட்டுமே. மீதி மூன்று பாகங்களும் அவருடைய ஒளிமயமான அமிர்தஸ்வரூபமே அவருடைய உண்மைத்தன்மையை அறிவதற்கு யாராலும் இயலாது. காயத்திரியால் புகழப்படும் புருஷனே பிரம்மம். மனிதனின் சக்திக்கு அப்பாற்பட்ட ஆகாசமாக இருப்பவர் அவரே.

"பஹீர்தா புருஷாகா சஹ". இது விழிப்பு நிலை; பிரம்மமாக மனிதனின் உடலுக்குள் ஆகாசமாக நிறைந்திருக்கிறார் என்று பொருள். "அந்தஹ புருஷா காசாக" இது கனவு நிலை. அவர் இதயத்தின் உள்ளிருக்கும் ஆகாசமாக இருக்கிறது. அதுவே முழுமை. அவர் முழுமையாக எங்கும் நிறைந்திருக்கிறார். இது ஆழ்ந்த உறக்க நிலை. இந்த உண்மைகளை உணர்ந்தவன் யாரோ, அவன் முழுமையை, பிரம்மத்தை அடைவான். அதாவது விழிப்பு, கனவு, ஆழ்ந்த

உறக்கம் (ஜாக்ரத, ஸ்வப்ன, சுஷுப்தி) எனப்படும் இந்த மூன்று நிலைகளையும் உணர்ந்தவன் யாரோ அவனே பிரம்மம் எனலாம்.

இந்த தெய்வீகமான, ஆத்ம தத்துவ ஸ்வரூபனின் நாமத்தை ஏற்றுள்ள மனிதன் களங்கமுள்ளவனாக, ஆசாரங்களற்றவனாக, ஆடம்பரமுடையவனாக, அகங்காரத்தின் இருப்பிடமாக மாறுவது எவ்வளவு கேவலம் எத்தகைய கொடுமை! புருஷன் என்ற புனிதமான பெயரைத் தாங்கி நிற்பதற்காகவாவது ஆத்ம தத்துவத்தில் ஓர் அணுவளவை மனிதன் ஆதரிக்கக் கூடாதா? அப்படியில்லை என்றால் இனி புருஷ தர்மம் எங்கே இருக்கிறது? இக் காலத்தில் புருஷ லட்சணத்தைக் காண்பதே அரிதாகி விட்டது.

**சந்தியா ஹிவோ சுசிர்நித்ய மனர்ஹ நிர்வ கர்மஸு**
**யதன்ய துக்ருகே ந தஸ்ய பல பாக்பபேத்**

என்று அந்தக் காலத்து ரிஷிகள் கூறியுள்ளார்கள். அதாவது மனிதன் சந்தியாவந்தனம் செய்வதை விட்டுவிட்டால் அவன் நாசமடைவான் என்று எல்லா ஸ்மிருதிகள் அறிவிக்கின்றன.

சந்தியாவந்தனம் செய்யாதவர்கள் வேறு எந்த விதமான கர்மங்கள் செய்வதற்கும் அருகதையற்றவர்கள். முற்காலத்தில் வாழ் நாள் முழுவதும் சந்தியாவந்தனத்தைத் தவறாது செய்ததன் மூலமாக நீண்ட ஆயுளையும், மேன்மை , புகழ், ஞானம், தெய்வீக ஒளி ஆகியவைகளையும் பெற்றிருந்தார்கள். காயத்ரி தியானம் செய்யாதவன் பிராமணன் அல்ல. பிரம்ம தத்துவத்தை அறிந்தவன் யாரோ, பிரம்மத்தை வழிபட்டுப் புனிதமடைந்தவன் யாரோ அவனே பிராமணன். இதில் ஜாதி, மத வித்தியாசங்கள் இல்லை. ஆனால் பிராமணன் என்ற பெயரைத் தாங்கி வந்தவன் இதை முக்கியமான செயலாக ஏற்று அனுசரிக்க வேண்டும்.

சந்தியாவந்தனம் என்றால் என்ன? சம் - பகவானிடத்தில்; தியா - சிந்தனை; மனத்தைப் பகவானிடத்தில் நிறுத்துதலே சந்தியா வந்தனம் எனப்படும். மனத்தைப் பகவானிடத்தில் நிறுத்துவதற்கு, அதைக்

கட்டுப்படுத்த வேண்டும், இல்லையா? அதற்கு மூவகைக் குணங்களான சத்வ, ரஜஸ், தமோ குணங்களை வெல்ல வேண்டும். இவைகளை வெல்ல இறைவனைப் பிரார்த்திக்க வேண்டும். இதுவே மனிதனின் முதற் கடமை. ப்ராத காலத்தை - அதாவது காலைப் பொழுதை சத்வகுண காலம் என்றும், பகல் நேரத்தை ரஜோகுண காலம் என்றும், மாலை நேரத்தைத் தமோகுண காலம் என்றும் சொல்லுவார்கள். இதுவே படைப்பின் தர்மம்; விதிகள்.

சத்வகுண காலமாகிய ப்ராத காலத்தில் மனம் உறக்கமாகிய ஆனந்தத்திலிருந்து விழித்து, சலனங்களிலிருந்து விடுபட்டு, பரிசுத்தமாக, பேரமைதியோடு இருக்கும். இந்த நேரத்தில் இறைவனை தியானித்தல் நன்மை பயக்கும் என்பது யாவரும் அறிந்ததே. இதைப் ப்ராத சந்தியாவந்தனம் என்று சொல்லுவார்கள். சந்தியாவந்தனம் என்பதன் பொருளைக் கூட தெரிந்து கொள்ளாமல், ஏதோ அநுசரிக்க வேண்டிய ஒரு கடமையாக எண்ணி, பெரியவர்கள் சொல்லக் கேட்டு, குருட்டுத்தனமாக அதை நிறைவேற்றுபவர்களும் இருக்கிறார்கள். இதனுடைய உட்பொருளைத் தெரிந்து கொண்டு, பின்னர் அதில் ஈடுடுவது, மனிதனின் இரண்டாவது (தர்மம்) கடமை.

பின்னர், ரஜோ குணம் அன்றாடச் செயல்களில் நுழைந்து களைப்புறச் செய்கிறது. அதனால் பசி தோன்றுகிறது. உணவு கொள்ளுமுன், இறைவனை சிந்தித்து, தியானம் செய்து, தயாரித்த உணவை இறைவனுக்கு அர்ப்பணம் செய்து பின்னரே புசிக்க வேண்டும். இதையே பகல் நேர (மத்தியாஹ்ன) சந்தியா வந்தனம் என்பார்கள். இதைப்பயிலுவதன் மூலம் ரஜோகுணம் கட்டுக்கு அடங்கி, சத்வகுணம் மேலோங்கும். இது மனிதன் கைக் கொள்ள வேண்டிய மூன்றாவது தர்மம்.

இனி, தமோ குணம் பிரவேசிக்கும் நேரமான மாலையில் ஒவ்வொரு ஆண் மகனும் வீடு வந்து சேர்ந்து, திருப்தியாக உண்டு, உறங்கப் போவான். ஆனால், செய்ய வேண்டிய காரியம் இதுவல்ல. இது சோம்பேறிகளின் இயல்பு. தமோகுணம் தன்னுள் நுழையும்போது (அதாவது மாலை நேரத்தில்) அதிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு, இறைவழிபாடு,

ஆன்மிக நூல்களைப் படித்தல் முதலான நற்கருமங்களில் ஈடுபட வேண்டும். இதுவே மாலையில் செய்யப்படும் சந்தியா வந்தனம்.

உறக்க மென்னும் ஆனந்த நிலையிலிருந்து வெளிப்படும் மனத்துக்கு அறிவுரை புகன்று, தன் வசப்படுத்திக்கொள்ள வேண்டும். சாதரண உறக்கத்திலேயே இத்தகைய மகிழ்ச்சி கிட்டுமென்றால், பகவத் தியானம் என்னும் உறக்க நிலையில் எத்தகைய ஆனந்தம் கிட்டும் என்று யோசித்துப் பாருங்கள் இந்த உண்மைகளை உள்ளபடி உணர்ந்து கொண்டு சத்வ குணத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும். இது மனிதன் இயற்ற வேண்டிய நான்காவது கடமை.

உயிரோடிருக்கும் காலம்வரை, மூன்று காலங்களிலும் சந்தியான வந்தனம் செய்து வந்தால், மனிதன் உத்தம புருஷனாக, ஒளி (தேஜஸ்) பொருந்தியவனாகத் திகழ்வான். அவனுடைய எல்லா விருப்பங்களும் நிறைவேறும். அவன் ஜீவன் முக்தனாவான். அன்றாடக் கடமைகளில் இதையும் ஒன்றாக எடுத்துக் கொண்டு சந்தியாவந்தனம் செய்யக் கூடாது. இதன் உட்கருத்தைப் புரிந்து கொண்டு இயற்றினால் தான் சிறப்பான பலன் கிட்டும். இதற்குக் காயத்திரி மந்திரத்தின் பொருளை மனத்தில் வாங்கிக்கொண்டு, சந்தியாவந்தனம் செய்வதே சிறப்பாகும். அதிலும், தேஜோ ரூபனான ஆத்ம ஸ்வரூபனும், மூல புருஷனுமான முழு முதற் கடவுளும் தானும் ஒருவரே என்ற ஏகத்துவ உணர்வோடு சந்தியா வந்தனம் இயற்றுதல் மனிதனின் மற்றொரு தர்மம்.

காயத்ரி ஜபத்தை அசட்டை செய்பவர்கள் அதன் உண்மை பொருளை அறியாதவர்களே. மனுவும்கூட அழுத்தமாகப் பிராமணனுக்குக் காயத்ரியே உயிர் மூச்சு என்று தெளிவாக்கியிருக்கிறார். இது சத்தியம். மனிதனின் புத்தியை வளர்த்து ஒளிமயமாக்கும். பேரின்பப் பேராளி (ஒளிமயமான இறைவனை) தியானம் செய்வதைக் காட்டிலும் புனிதமான செயல் வேறு என்ன இருக்கிறது? மனத்தை பாவத்தின் வழியில் செல்ல விடாமல் காப்பாற்றும் இறை வழிபாட்டை விட சிறப்பான செயல் வேறு என்ன இருக்கிறது. நற்குணங்களை வளர்த்துக் கொள்வதைக் காட்டிலும் சிறந்த செயல் எது? பிராமணம் காயத்ரி மந்திரத்தின் சாரமான பிராமணத்துவத்தை

நழுவ விடாமல் வேத அத்யயனம் செய்வதற்குச் சக்தி இல்லாவிட்டாலும் கூட - காயத்ரியையாவது தவறாது செய்ய வேண்டும் என்று மனு வற்புறுத்துகிறார். காயத்திரியைவிடச் சிறந்த செல்வம் வேறு இல்லை என்று ஸ்மிருதி சொல்லுகிறது.

உலகில் எல்லாச் செயல்களையும் நிறைவேற்றிக்கொள்ள சக்தியளிப்பது ஆத்ம சக்தியே. அப்படிப்பட்ட ஆத்ம சக்தி பெர குவதற்குக் காரணமான காயத்ரியை ஒவ்வொரு மனிதனும், மூன்று காலங்களிலும் தவறாமல் இயற்ற வேண்டும். அந்தச் சக்தியைப் பெருக்கிக் கொள்வதற்குப் புனிதமான மனஉணர்வுகள் முக்கியம். உடல் நலம் பெற பரிசுத்தமான சாத்விக உணவு எப்படி முக்கியமோ அதேபோல புத்தியை விசாலப்படுத்திக் கொள்வதற்கு ஆதாரமான சூரிய ஒளியை உணர்வு வடிவில் உள்ளொளியின் மூலமாகப் பெருக்கிக் கொள்ள வேண்டும். அந்தப் பணியைச் சந்தியா காலத்தில் தான் செய்ய வேண்டும். ஆத்ம சக்தி குறைந்தால் புலன்களின் சக்தியும் குறைந்து விடும். அந்த நிலையில் சூரியனின் சக்தியைப் பெருக்கிக் கொண்டால், அது பட்டதில் விதைத்த பயிராகப் பெருகும்.

சூரியன் உதித்துத் தன் ஒளிக் கிரணங்களைப் பரப்பும் போது இருள் மறைந்து விடுகிறது. அப்பொழுது விளக்கை ஏற்ற வேண்டிய அவசியம் ஏது? இருளகற்றும் பேரொளியை மனிதன் தன்னில் நிறைத்துக் கொண்டால் பிரம்ம தேஜஸ் அவனிடம் ஒளிவிடும். அக்காலத்திய முனிவர்கள் இதைப் பெறுவதற்கான வழிமுறைகளைப் பற்றி விரிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இதைப் பயிற்சித்துப் பார்த்தால், இதனுடைய பலன்கள் எப்படிப்பட்டது என்று அனுபவ பூர்வமாக அறியலாம்.

உபநயனம் செய்வது எதற்காக? உபநயனத்துக்கு முன் எந்த மந்திரத்தை உபதேசிக்கிறார்கள்? அந்த மந்திரத்தை முன்னதாகவே உபதேசிப்பதற்கு என்ன காரணம்? மற்ற மந்திரங்கள் ஏன் உபதேசிக்கக் கூடாது? இவைகளை எல்லாம் யோசித்துப் பார்த்தால், காயத்ரியே எல்லா மந்திரங்களுக்கும் சக்கரவர்த்தி போன்றது என்பது விளங்கும்; அந்நாளைய தர்மத்தையொட்டிய செயல்கள், விதிகள், நியமங்கள் ஆகியவைகளின் உண்மை உருவம் புரியும். உண்மையை யோசிக்காமல், தங்கள் தங்கள்

ஊகங்களுக்கு இடம் கொடுத்தால், அநியாயத்துக்கும் அதர்மத்துக்கும் இரையாவீர்கள்

உண்மையில் காயத்ரி என்றால் பொருள் என்ன? இந் நாளைய மக்களுக்கு இது பற்றி ஏதாவது தெரியுமா? ஏதோ ஒரு பெண் தெய்வத்தின் பெயர் என்றோ அல்லது அது ஒரு மந்திரம் என்று அநேக விதமான பதில்களைக் கேட்கலாம். ''கய" த்தைக் காப்பது காயத்ரி. கய என்றால், பிராணன் அல்லது வாக்கு முதலான புலன்கள். அதுமட்டுமல்ல, "காயந்தம் த்ரா யதே யஸ்மாத் காயத்ரீ தேனத்யதே' அதாவது, தன்னைக் கானம் செய்பவர்களைக் (பஜனை, பிரார்த்தனை, தியானம்) காப்பதே காயத்ரி என்பதன் பொருள்.

இந்த பவித்திரமான மந்திரமே விஸ்வாமித்திரர் போன்ற ராஜரிஷிகளைப் பிரம்ம ரிஷிகளாக மாற்றியது. அது எல்லாக் கலைகளையும் அளிக்கும் கற்பக விருட்சம். அந்த வேத மாதா தன்னை வழிபடுபவர்களுக்குச் சகல வரங்களையும் அளிப்பாள். பிரம்ம சூத்திரத்திலும், தர்ம சூத்திரத்திலும் இந்த தேவதையைப் பற்றி வர்ணித்து எழுதப்பட்டுள்ளது. அவைகளை நீங்கள் புரிந்து கொண்டால் எதனுடைய ஆதாரமும் இன்றி உங்களுக்கே உண்மை புரியும். இப்பொழுது அந்த தர்மங்களுக்கு ஒன்றுக்கு ஒன்பது அர்த்தங்கள் கற்பித்து, லௌகிக விவகாரங்களோடு ஒப்பிடுகிறார்கள். தர்மம் தாழ்வடைந்ததற்கு அதுவே காரணம். இந்த நிலையிலிருந்து அது மேன்மையுற வேண்டுமானால், அதனுடைய பழையநிலையைத் திரும்பப் பெற வேண்டுமானால், சனாதன தர்மங்களைப் புனருத்தாரணம் செய்ய வேண்டியது அவசியம். இல்லையென்றால் தவறான கருத்தை மாற்றிக்கொண்டு, ஆத்ம தர்மத்தை அனுசரித்தல் அனைத்தும் அறச் செயல்களாகவே மாறிவிடும்.